## ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளில் இருந்தவர்கள் எல்லாம்

# பா.ஜ.க.விற்கு வந்ததும் அப்பழுக்கற்றவர்களாக - புனிதர்களாக ஆவது எப்படி?

## “நியூஸ் 18” தொலைக்காட்சி ‘சொல்லதிகாரம்’ விவாதத்தில் ஊடகவியலாளர் ஐயன் கார்த்திகேயன் கேள்வி!

சென்னை,மே 28,

“நியூஸ் 18” தொலைக்காட்சியில் ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் அமைச்சர் செந்தில் பாலாஜி உறவினர் வீடுகளில் ரைடு செய்தது குறித்த விவாதத்தில் பங்கேற்ற ஊடகவியலாளர் ஐயன் கார்த்திகேயன் பேசுகையில் ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளில் இருந்தவர்கள் எல்லாம் பா.ஜ.க.விற்கு வந்ததும் ஞானஸ்தானம் பெற்று புனிதர்களாக ஆகி விடுகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

நியூஸ் 18 தொலைக்காட்சியில் “சொல்லதிகாரம்” நிகழ்ச்சியில், “வருமான வரிச் சோதனைகள், அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு நெருக்கடியா?” என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்தில் ஊடகவியலாளர் ஐயன் கார்த்திகேயனின் விவாதம் வருமாறு:

**ஊடகவியலாளர் ஐயன் கார்த்திகேயன்:** இ.டி. வழக்கில் எத்தனை வழக்குகளில் கன்வெக்ஷன் ஆகி இருக்கு? 2005 இல் இருந்து வெறும் புள்ளி 4.2 சதவிகிதம் தான். அப்புறம் இந்த வழக்குகள் போடுவதற்கான தேவை எங்கிருந்து இருக்கு? ஒருத்தர் மீது வழக்கு போடுகிறோம் என்று சொன்னால், கன்வெக்ஷன் வாங்கி, யார் குற்றவாளி என்று நிரூபிக்க வேண்டும்.

அப்புறம் இ.டி. என்கிற அமைப்பு எதற்காக செயல்படுகிறது? 2005 இல் இருந்து புள்ளி 4.2 சதவிகிதம் மட்டும்தான் அவங்க கன்வெக்ஷன் வாங்கி இருக்காங்க. அவங்க என்ன செய்கிறார்கள்? தீர்ப்பான 25 வழக்குகளை மட்டும் எடுத்து வைத்துக் கொண்டு மொத்தம் போட்டது 5906 கேசு. இதில் தீர்ப்பான 25 கேசுகளை மட்டும் கையில் வைத்துக் கொண்டு, 96 சதவிகிதம் நாங்கள் கன்வெக்ஷன் வாங்கி இருக்கோம். ஒரு கேசு மட்டும் தான் வெளியில் போய் இருக்கு பாருங்க என்று சொல்லி காண்பிக்கிறார்கள்.

இப்படி ஒரு அமைப்பு எதற்காக இயங்குகிறது என்றால், வழக்கு தீர்ப்பு நோக்கி நகரனும், குற்றவாளி குற்றம் என்று நிரூபிக்க வேண்டும். அப்படியே நகராமல் வெறும் இது மிரட்டல் போக்குக்காக மட்டும் தான் இது நடக்கிறது.

சி.பி.ஐ. வந்து கேஸ் பைல் செய்கிறார்கள், ஆனால் சார்ஜிட் பைல் செய்வது இல்லை என்று உச்சநீதிமன்றம் கண்டிக்கிறது.

இப்படியான அமைப்புகள், இந்த சுதந்திரமாக இருந்து கேள்வி கேட்கக் கூடிய இந்த அமைப்புகள் எல்லாம் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் ? என்ற கேள்வி நமக்கு எழுகிறது. தலைமைச் செயலகத்திலேயே ரைடு , ஜெயலலிதா அவர்கள் வீட்டிலேயே ரைடு என்று இவை எல்லாம் நடந்தது. இதே மாதிரி என்னென்னமோ ரைடு நடந்தது. அமைச்சர்கள் வீட்டில் ரைடு நடத்து. அந்த ரைடு இந்த ரைடு என்று நடந்தது. சசிகலா வீட்டில் ரைடு, இப்படி ஏகப்பட்ட ரைடு நடந்தது இல்லையா? அந்த அமைச்சர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்தாங்க? இவ்வளவு நாட்கள் ஆகி விட்டது அல்லவா? இவர்கள் மீது எல்லாம் என்ன நடவடிக்கை எடுத்தாங்க?

**நெறியாளர்** : நடவடிக்கைகளைக் காட்டிலும், முகாந்திரம் இருக்கு, அதனால் தான் அவர்கள் எடுக்குறாங்க, இல்லைன்னா எடுக்க முடியாதுன்னு சொல்றாங்க.?

**ஐயன் கார்த்திகேயன்** : ரைடுகள் நடந்து இவ்வளவு நாள் ஆயிடுச்சு இல்லையா?, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கு? அந்த வழக்குகளோட ஸ்டேட்டஸ் என்ன? அது எத்தனை ஆண்டுகள் ஆகி இருக்கு? இத்தனை ஆண்டுகளில் என்ன பிராசசிங் இருக்கு? விஜய பாஸ்கர் வந்து தவறு செய்தார் என்று எதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கா? அல்லது தலைமைச் செயலகத்தில் ரைடு நடந்தது அந்த தலைமைச் செயலகத்தில், அப்போதைய தலைமைச் செயலாளர் மீதே குற்றம் சுமத்தப்பட்டது, ஆனால் யார் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. அப்போ இந்த அமைப் போட வேலை என்ன? நான் உன்னை கேள்வி கேட்பேன், உன்னை மிரட்டுவேன் நீ, நாங்கள் சொல்வதை கேட்பதற்கு நீ தொடங்க வேண்டும், அப்படித் தொடங்கினால் உடனே நாங்கள் உன்னை விட்டு விடுவோம்.

இது இங்கே மட்டுமல்ல இந்தியா முழுவதும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. இந்தியா முழுக்க பல்வேறு ஆட்கள் வேறு வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் இடத்தில் இது நடந்திருக்கு. நாராயண ரானே என்பவர் 300 கோடி ரூபாய் பிரச்சினை, அவர் மீது 300 கோடி ரூபாய் என்று குற்றம் சொன்னாங்க. ஆனால், அவர் பி.ஜே.பி.யில் சேர்ந்தார், அதன் பிறகு அப்படியே அதனை விட்டு விட்டாங்க.

**நெறியாளர்:** ஆமாம் அவர் மகாராஸ்டிராவைச் சேர்ந்தவர்.

**ஐயன் கார்த்திகேயன்** : அடுத்து ஹிமந்தா பிஸ்வா சர்மா, இவர் மீதும் வழக்கு நடந்துக்கிட்டு இருக்கு, அவர் பி.ஜே.பி.யில் சேர்ந்தார், இப்போது அவர் என்னவா இருக்கிறார் தெரியுமா? அசாம்மோடு சீப்மினிஸ்டர். இப்படி வரிசையாக எடுத்துக் கொண்டீர்களேயானால், அதே மாதிரி எடியூரப்பாவை எடுத்துக் கொண்டீர்களேயானால், இதே மாதிரி வேறு வேறு மாநிலங்களுடைய விஷயங்களை எடுத்துக் கொண்டீர்களேயானால் , எல்லா இடங்களிலும் எதிர்க்கட்சிகளை பணிய




வைப்பதற்கானவைகளாகத் தான் இவைகளை பார்த்து இருக்காங்க, அங்கே இருக்கும் போது அவர்கள் எல்லாம் மோசமானவர்கள், பி.ஜே.பி.க்கு வந்ததும் ஞானஸ்தானம் வாங்கிடுறாங்க, புனிதமாகி விடுகிறார்கள்.

**நெறியாளர்:** அப்படி வந்து இன்னொரு கேள்வியும் அவர்கள் கேட்கிறார்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் தான், இந்த மாதிரி அமைப்புகளில் இருப்பவர்களை எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கு பயன்படுத்துகிறார்கள், இப்போ தமிழ் நாட்டில் ரெய்டு போகிறார்கள், முன்னாள் அமைச்சர்கள் வீடுகளில், அப்போ கேட்கும் போது முகாந்திரம் இருக்கு, அவர்கள் தவறு செய்து இருக்கிறார்கள், அப்போ வந்து இது நியாயமான நடவடிக்கை, அப்படி என்று இன்றைக்கு தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய தி.மு.க. கூட்டணியில் இருக்கக் கூடிய கட்சிகள் எல்லாம் அதனை நியாயப்படுத்தி பேசுகிறார்கள், அதே மாதிரி மத்தியில் அதிகாரத்தில் இருக்கக் கூடிய பா.ஜ.க. செய்யும் போது இது பழிவாங்கும் நடவடிக்கையாக மாறுது இல்லையா? அப்போ இவை இரண்டையும் நாம் எப்படி பழி வாங்கும் நடவடிக்கையா புரிந்து கொள்ள முடியும்?

**ஐயன் கார்த்திகேயன்:** அதாவது முன்பு என்ன நடந்தது? ஏகப்பட்ட ரைடு போட்டது யார்? அவர்கள் கூட்டணியில் இருந்த பா.ஜ.க. தானே. அவர்கள் கூட்டணியில் இருந்து விலக்காமலே வைத்துக் கொண்டிருக்கின்ற பா.ஜ.க. தான் அவர்கள் மேல் எல்லா இடத்திலும் ரைடு போட்டது.

அதனுடைய தொடர்ச்சி தான் இப்போது நாம் பார்ப்பதற்கான ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்தது யாரு? இவர்கள் எல்லாம் தவறு செய்கிறார்கள், இவர்கள் எல்லாம் முறைகேடு செய்கிறார்கள், இவர்கள் மீது ரைடு போட வேண்டி இருக்கு, இதனை உருவாக்கியது யாரு,? பா.ஜ.க.! அதனுடைய தொடர்ச்சியாகத் தான், அவர்கள் காட்டுவதற்கான ஏகப்பட்டதை உருவாகிடுச்சு. ஆமாம், ஏற்கனவே அவர்கள் மீது இதே மாதிரியான ரைடு நடந்திட்டு இருந்துச்சு, அதனுடைய தொடர்ச்சியாகத்தான் இதனை செய்கிறோம், அப்படி என்கிற ஒரு இடத்தை உருவாக்கி வைத்திருந்தார்கள். அதனை எதிர்த்து சண்டையிட்டு பா.ஜ.க. சொன்னது எல்லாம் பொய், பா.ஜ.க.வோட கூட்டணியே பண்ண மாட்டோம், எப்படி பா.ஜ.க. எங்களை குற்றம் சுமத்தலாம், எங்கள் மீது இவ்வளவு ரைடுகளை போடலாம்? என்று கேள்வி கேட்டு இருந்தால், அது வேறு மாதிரி வந்து இருக்கும். இதனை அவர்கள் செய்ய வில்லை. திரும்ப திரும்ப அவர்கள் இப்போவும் அவர்களோடு கூட்டணியில் தான் இருக்கிறோம் என்று அறிவிக்கிறார்கள்.

**நெறியாளர்:** இதனை அ.தி.மு.க. காரர் (கோவை சத்யன்) மறுக்கிறார், இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**ஐயன் கார்த்திகேயன்:** நான் தி.மு.க.வைச் சேர்ந்தவர் இல்லை, இதனை என்னிடம் கேட்டால், மீண்டும் இந்த விவாதம் பழயை டைரக்ஷனுக்கு போய்விடக் கூடாது . இவ்வளவு வழக்குகள் போட்டும் பா.ஜ.க.வோட அ.தி.மு.க. தொடர்ந்து கூட்டணியில் இருக்கிறாங்க, அவங்க வேறு வேறு இடத்தில் அப்பளே செய்ததைத்தான் அங்கேயும் அப்பளே செய்றாங்க என்பது தான் இங்கே இருக்கின்ற பிரச்சினை. நான் சொல்றது இது தான், இதனை செய்தால் நான் நிறுத்தி வைப்பேன், இல்லேன்னா திரும்ப நான் பாய்வேன். அப்படி என்பது தான் அதனுடைய விஷயம். எத்தனை முறை இது நடந்தது திரும்ப திரும்ப என்ற ஒரு கேள்வியும் இருக்கு.

இப்போ இதனுடைய தொடர்ச்சியாகத் தான் இங்கேயும் இது நடக்கிறது. நான் உறுதியாக செந்தில் பாலாஜி அவர்கள் அப்பழுக்கற்றவர், அவர் வந்து எந்த தவறும் செய்யாதவர் என்றெல்லாம் சொல்ல வில்லை. செய்து இருக்கலாம், ஆனால், அவரும், அவர் முன்னாடி ஒரு கோரிக்கையும் வைக்கப்பட்டு, அவர் அதனை நிறைவேற்றிவிட்டால் போதும் என்ற இடத்தில் தான் இன்றைக்கு பா.ஜ.க.வும் இப்படி வேலை செய்கிறது என்று நினைக்கத் தோன்றுகிறது.

**நெறியாளர்:** நீங்கள், பா.ஜ.க.விற்கு போனால் அவர்கள் புனிதர்களாக ஆகி விடுவார்கள் என்று கூறினீர்கள், இது எவ்வளவு தூரம் பலன் கொடுக்கும்?

**ஐயன் கார்த்திகேயன்:** நாம் இதனை போகப்போகத்தான் பார்க்க வேண்டும். இங்கே அண்ணன் (கோவை சத்யன் செந்தில் பாலாஜி சகோதர் வீடுகளில் ரைடின் போது தி.மு.க.வினர் வந்தது குறித்து பேசினார்) வந்து, தவறா ஒரு தகவலை பதிவு செய்துவிட்டார் எஸ்.பி. வேலுமணி அவர்கள் வீட்டிலும் பிரச்சினை எல்லாம் செய்தாங்க, பேரிகேட் எல்லாம் தூக்கி போட்டாங்க, அங்கேயும் தள்ளுமுள்ளு எல்லாம் நடந்தது, முன்னாடி உட்கார்ந்து போராட்டம் எல்லாம் செய்தாங்க, அண்ணன் வந்து அதை மாத்தி சொல்லிவிட்டார், (அ.தி.மு.க.வைச் சேர்ந்த கோவை சத்யன் அதற்கு மறுப்பு தெரிவிக்கிறார்) அதற்கான ஆதாரத்தை எல்லாம் நான் காட்டுகிறேன்.

அடுத்து அஜித் பவார் மேல் 9 வழக்குகள் இருந்தது, அஜித் பவார் பா.ஜ.க.வில் சேர்ந்த 48 மணி நேரத்தில் அந்த வழக்குகளும் திரும்பப் பெறப்பட்டது. சொம்மா போறப் போக்கில் வந்து அந்தக் குற்றச்சாட்டை சொல்ல வில்லை, அசாம் சி.எம்.ஆக இருந்தவர் , அவர் மீது வழக்கு நடந்துக்கிட்டு இருக்கு, பி.ஜே.பி.யில் சேர்ந்த உடனே அவரை சி.எம்.ஆகவே ஆக்கியாச்சு, அந்த வழக்கு என்ன ஆச்சு? என்றே தெரிய வில்லை.

இப்படித்தான் நீங்க இந்தியா முழுவதும் நடத்துறீங்க என்பது தான் என்னுடைய கொஸ்டீன், இப்போது இவர் மீது தவறு சொன்னீர்கள் என்றால் அதன் மீது நடவடிக்கை எடுக்க எல்லாம் செய்தால் பரவாயில்லை, அப்படி எதுவுமே நடக்கிறது இல்லை, அதிகாரிகளை பெட்டராக நடத்தி இருக்கலாம், உறுதியாக பெட்டராகத்தான் நடத்தி இருக்கணும். அதில் எதுவும் குழப்பமில்லை அந்தப் பாதுகாப்பை அவர்கள் கேட்காமல் அதிகாரிகள் வந்ததே, “அதற்காகத் தானோ” என்ற ஒரு கேள்வியையும் நாம் புறம் தள்ள முடியாது. இன்றைக்கு பா.ஜ.க.வோட ஓவர் ஆல் இந்தியாவிற்குள் இப்படி இருக்கின்ற மெத்தேட் தான் நமக்கு அச்சத்தைத் தருகிறது.

இவ்வாறு விவாதத்தில் பங்கேற்று ஐயன் கார்த்திகேயன் ஆணித்தரமான விவாதத்தை எடுத்து வைத்தார்.

---

## பேரவைத் தலைவர் மு. அப்பாவு தலைமை! அமைச்சர் ராஜகண்ணப்பன் முன்னிலை!

# நெல்லை மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டம் - குடிநீர்த் திட்டப் பணிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார் !

*நெல்லை,மே 28-*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி நெல்லை மாநகராட்சியில் ரூபாய் 422.79 கோடி செய்து முடிக்கப்பட்ட சீர்மிகு நகர திட்டம் மற்றும் 50 எம்.எல்.டி. குடிநீர் திட்டப்பணிகள் துவக்க விழா நிகழ்வு பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் உள்ள நேருஜி கலையரங்கில் தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர். எஸ்.ராஜ கண்ணப்பன் முன்னிலை யில் நடைபெற்றது. இந்நிகழ் வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று துவக்கி வைத்தார்.*

*நெல்லை மாநகராட்சியில் பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் உள்ள நேருஜி கலையரங்கில் நெல்லை மாநகராட்சியில் ரூபாய் 422.72 கோடியில் செய்து முடிக்கப்பட்ட சீர்மிகு நகரத்திட்டம் மற்றும் 50 எம்.எல்.டி குடிநீர் திட்டப்பணிகள் துவக்க விழா நிகழ்வு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஷிவ்தாஸ் மீனா, நகராட்சி நிர்வாக இயக்குனர் பொன்னையா, குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குனர் தட்சிணாமூர்த்தி, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞான திரவியம்,சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வகாப் (பாளை) நயினார் நாகேந்திரன் (நெல்லை) மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், துணை மேயர் கே.ஆர். ராஜு ஆகியோர் முன்னிலையில் நடை பெற்றது.*

*இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று நெல்லை மாநகராட்சி சீர்மிகு நகர திட்டம் கட்டி முடிக்கப்பட்ட பணிகளையும்,குடிநீர் திட்ட பணிகளையும் துவக்கி வைத்தார்.*

*நிகழ்வில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டில் சிறப்பான பணியை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு சிறப்பாக செய்து வருகிறார்கள்.*

*10 மாவட்டங்களில் ரூபாய் 10 ஆயிரத்து 44 கோடியில் திட்டப் பணிகளை 4 நாட்கள் சுற்றுப்பயணத்தில் அமைச்சர் நேரு தொடங்கி வைக்கிறார்.*

*கூடங்குளம் அணுமின் நிலையத்தின் வளாக இயக்குனிடம் பேசி ரூபாய் 14.50 கோடி சமூக பாதுகாப்பு நிதி ஒப்புதல் பெற்றுள்ளேன். இந்த நிதியின் மூலம் அந்த பகுதிக்கு குடிநீர் திட்டங்களை நிறைவேற்றித் தர மாவட்ட ஆட்சியர் உரிய கோப்புகளை தயார் செய்து அனுமதி பெற்று தர வேண்டும்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இரவு பகல் பாராது தமிழக மக்களுக்காக தொடர்ந்து உழைத்து வருகிறார். நெல்லை மாவட்ட மக்கள் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.*

*பின்னர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது.*

*நெல்லை மாநகராட்சியில் ரூபாய் 295 கோடி மதிப்பீட்டில் 50 எம்.எல். டி.குடிநீர் அபிவிருத்தி திட்டம் ரூபாய் 58.71கோடி மதிப்பில் பொருட்காட்சி மைதானத்தில் அமைக்கப் பட்டுள்ள வர்த்தக மையம்,*

*ரூபாய் 13.61 கோடி மதிப்பீட்டில் ஒட்டுமொத்த விற்பனை சந்தை, 23.14 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையத்தில் பல்லடுக்கு இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம், 11.97 கோடி மதிப்பீட்டில் நேருஜி கலையரங்கம்,4.20 கோடி மதிப்பீட்டில் கருப்பன் துறை, வண்ணாரப் பேட்டை பகுதியில் 3 இடங்களில் சலவைத் துறை,12.31 கோடி மதிப்பீட்டில் வார்டு எண்கள் 1819 மற்றும் 20 ஆகிய பகுதி உள்ள 6 இடங்களில் பசுமை பூங்கா,8.40 கோடி மதிப்பீட்டில் 9 இடங்களில் பெருமாள்புரம்,பேட்டை, சமாதானபுரம், பாளையங்கோட்டை,மேலவீரராகபுரம், மேலப்பாளையம், கொக்கிரகுளம், பழைய பேட்டை,மற்றும் பாட்டபத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் என ரூபாய் 422.79 கோடி மதிப்பீட்டில் நெல்லை மாநகராட்சியில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.*

*கடந்த 2 ஆண்டுகளில் நெல்லை மாநகரத்தில் ரூபாய் 198.99 கோடி மதிப்பிலும் 3 நகராட்சிகளில் ரூபாய் 106.44 கோடி மதிப்பிலும்,பேரூராட்சி களில் ரூபாய் 206.31 கோடி மதிப்பீட்டிலும்,தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூபாய் 1496.76 கோடி மதிப்பீட்டிலும் என நெல்லை மாவட்டத்தில் மட்டும் ரூபாய் 2008.44 கோடி மதிப்பில் நகராட்சி நிர்வாக துறையின் மூலம் மட்டும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகராட்சி மேயராக 2 முறை 7 ஆண்டுகளும்,உள்ளாட்சித் துறை அமைச்சராகவும்,துணை முதல்வராகவும் இருந்தவர். இதனால் உள்ளாட்சி நிர்வாகம் குறித்து நன்கு அறிந்தவர்.அதற்காக நிதிகளை ஒதுக்கி தருகிறார்.நகராட்சி நிர்வாகத் துறைக்கு மட்டும் நடப்பு ஆண்டில் ரூபாய் 24,000 ம் கோடி நிதி முதலமைச்சர் ஒதுக்கி தந்துள்ளார்.மேலும் பேரவை தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி கூடங்குளம் அணுமின் நிலைய சமூக பாதுகாப்பு நிதியை குடிநீர் திட்டத்திற்கு பயன்படுத்துவது தொடர்பாக துறையின் செயலாளர் குறிப்பு எடுத்து வைத்துள்ளார்.அந்த திட்டத்தை குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அல்லது ஊரகத் தொழில் துறை அமைச்சரிடம் தெரிவித்து நிறைவேற்றி தரப்படும்.*

*நெல்லை மாநகராட்சியில் ரூபாய் 650 கோடியில் பாதாள சாக்கடை பணிக்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு,ஒரு வாரத்தில் டெண்டர் இறுதி செய்யப்பட்டு பணிகள் உடனடியாக தொடங்கப்படும். பாதாள சாக்கடைத் திட்டம் முடிந்த பிறகு சாலை பணிகள் அனைத்தும் முடிக்கப்படும்.*

*இப்படி 2 ஆண்டுகால ஆட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து சாதனைகளை செய்துவருகிறார்.தொடர்ந்து நீங்கள் அவருக்கு ஆதரவு தர வேண்டும்.*

*இவ்வாறு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு.பேசினார்.*

*இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான்,நெல்லைமாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநில வர்த்தக அணி இணைச்செயலாளர் மாலை ராஜா,தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ். லெட்சுமணன், மண்டல தலைவர்கள் பிரான்சிஸ் (பாளை) ரேவதிபிரபு (தச்சை)முன்னாள் துணை மேயர் முத்துராம லிங்கம்,*

*மத்திய மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ், முன்னாள் பொருளாளர் அருண்குமார்,பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன் (தச்சை)அண்டன் செல்லத்துரை (பாளை) நமச்சிவாயம் (நெல்லை) மாமன்ற உறுப்பினர்கள் சுதாமூர்த்தி, கருப்பசாமி கோட்டையப்பன், அனுராதா, சங்கர பாண்டியன், கோகுலவாணி, வில்சன் மணித்துரை, கிட்டு என்ற ராம கிருஷ்ணன்,ரவீந்தர்,சுந்தர், நித்திய பாலையா,பேச்சியம்மாள், கந்தன் சின்னத்தாய், மாரி யப்பன், அஜய், அபிஷேக்மன்சூர், முத்துசுப்பிரமணியன், மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி, ஜோசப் பெல்சி, முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க.மணி, மாணவர் அணி அமைப்பாளர்மீரான், மேகை செல்வம்,உள்பட உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதி கள்,கழகத்தினர்,அரசு அலுவலர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.*

*நிகழ்ச்சி நிறைவில் மாநகராட்சி ஆணையர் வ.சிவ கிருஷ்ணமூர்த்தி நன்றி உரையாற்றினார்.*




சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நேற்று (27.05.2023) இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்ற மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு ஓய்வுகால பணப்பலன்களுக்குரிய காசோலைகளை வழங்கினார். அதனை தொடர்ந்து, இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுடன் பயனாளிகள் குழுபுகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சண்முகம், சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்தரரெட்டி மற்றும் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் அ.அன்பு ஆபிரகாம், கு.இளங்கோவன் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.